# ஜனவரி – 07 – திங்கள்

புனித பெனாப்பேர்த்து ரேய்முத்து

**ஆண்டவரே, எழுந்தருளும்: என் கடவுளே, என்னை மீட்டருளும்: திபா. 3:7**

## முதல் வாசகம் : 1 யோவான் 3 : 22 --- 4 : 6

அன்பார்ந்தவர்களே, கடவுளிடம் நாம் எதைக்கேட்டாலும் பெற்றுக் கொள்வோம் ஏனெனில் அவர் கட்டளைகளைக் கடைப் பிடிக்கிறோம் அவர் திருமுன் அவருக்கு உகந்தவற்றையே செய்து வருகிறோம். கடவுள் நமக்குக் கொடுத்த கட்டளைப்படி, அவருடைய மகன் இயேசு கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொண்டு, ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்தவேண்டும். இதுவே அவரது கட்டளை. கடவுளுடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பவர் அவரோடு இணைந்திருக்கிறார் கடவுளும் அவரோடு இணைந் திருக்கிறார். கடவுள் நம்மோடு இணைந்திருக்கிறார் என்பதை அவர் நமக்கு அருளிய தூய ஆவியால் அறிந்து கொள்கிறோம். அன்பார்ந்தவர்களே, தூய ஆவியின் தூண்டுதல் தமக்கு இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் எல்லாரையுமே நம்பிவிடாதீர்கள் அந்தத் தூண்டுதல் கடவுளிடமிருந்து வருகிறதா எனச் சோதித்தறியுங்கள் ஏனெனில் போலி இறைவாக்கினர் பலர் உலகெங்கும் தோன்றியுள்ளனர். இயேசு கிறிஸ்து மனிதராக வந்தவர் என்னும் உண்மையை ஏற்றுக்கொள்ளும் தூண்டுதல் அனைத்தும் கடவுளிடமிருந்து வருவது. இவ்வாறு கடவுளிடமிருந்து வரும் தூண்டுதல் எதுவென அறிந்து கொள்வீர்கள். யேசுவை ஏற்று அறிக்கையிட மறுக்கும் தூண்டுதல் எதுவும் கடவுளிடமிருந்து வருவதல்ல. இதுவே எதிர்க்கிறிஸ்துவிடமிருந்து வரும் தூண்டுதல். இந்த எதிர்க்கிறிஸ்து வருவதாக நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்! இதோ! இப்போதே அவன் உலகில் இருக்கிறான். பிள்ளைகளே, நீங்கள் கடவுளைச் சார்ந்தவர்கள். நீங்கள் அந்தப் போலி இறைவாக்கினர்களை வென்றுவிட்டீர்கள் உங்களுள் இருப்பவர் உலகில் இருக்கும் அந்த எதிர்க் கிறிஸ்துவை விடப் பெரியவர். அவர்கள் உலகைச் சார்ந்தவர்கள். எனவேதான் உலகு சார்ந்தவற்றையே பேசுகிறார்கள், உலகமும் அவர்களுக்குச் செவிசாய்க்கிறது. ஆனால் நாம் கடவுளைச் சார்ந்தவர்கள் கடவுளை அறிந்துகொண்டோர் நமக்குச் செவி சாய்க்கின்றனர். கடவுளைச் சாராதோர் நமக்குச் செவி சாய்ப்பதில்லை. இதிலிருந்து, உண்மையான தூண்டுதல் எது, பொய்யான தூண்டுதல் எது என்பதை நாமறிந்து கொள்ளலாம்.

**பதில்பாடல் :** நாள் பிற நாடுகளை உமக்கு உரிமைச்
சொத்தாக்குவேன்.

## நற்செய்தி : மத்தேயு 4 : 12 – 17, 23 – 25

அக்காலத்தில் யோவான் கைது செய்யப்பட்டதை இயேசு கேள்விப்பட்டுக் கலிலேயாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். அவர் நாசரேத்தைவிட்டு அகன்று செபுலோன், நப்தலி ஆகிய இடங்களின் எல்லையில் கடலோரமாய் அமைந்திருந்த கப்பர் நாகுமுக்குச் சென்று குடியிருந்தார். இறைவாக்கினர் எசாயா உரைத்த பின்வரும் வாக்கு இவ்வாறு நிறைவேறியது ”செபுலோன் நாடே! நப்தலி நாடே! பெருங்கடல் வழிப் பகுதியே! யோர்தானுக்கு அப்பாலுள்ள நிலப்பரப்பே! பிற இனத்தவர் வாழும் கலிலேயப் பகுதியே! காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடரொளி உதித்துள்ளது.” அதுமுதல் இயேசு, ”மனம் மாறுங்கள், ஏனெனில் விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது” எனப் பறைசாற்றத் தொடங்கினார். அவர் கலிலேயப் பகுதி முழுவதும் சுற்றிவந்தார் அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் கற்பித்தார் விண்ணரசு பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றினார் மக்களிடையே இருந்த நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார். அவரைப் பற்றிய பேச்சு சிரியா நாடு முழுவதும் பரவியது. பல்வேறு பிணிகளாலும் வாதைகளாலும் வருந்திய நோயாளர், பேய் பிடித்தோர், மதிமயங்கியோர், முடக்குவாதமுற்றோர் ஆகிய அனைவரும் அவரிடம் அழைத்து வரப்பட்டனர். அவர் அவர்களைக் குணமாக்கினார். ஆகவே கலிலேயா, தெக்கப்பொலி, எருசலேம், யூதேயா, யோர்தானுக்கு அக்கரைப் பகுதி ஆகிய இடங்களிலிருந்து வந்த மக்கள் பெருந்திரளாய் அவரைப் பின்தொடர்ந்தனர்

**தியானம் :** இன்றைய நாள் தியான வாசகங்கள் விசுவாசம், நம்பிக்கை என்பதை மையப்படுத்தி எங்களை தியானிக்க அழைத்து நிற்கின்றது. ஏனென்றால் ஆண்டவராகிய இயேசு என்றும் எங்கள் கூடவே இருந்து எங்களை வளிநடத்துகின்றார், இன்று நாங்கள் எமக்கு நேரிடும் யாவற்றையும் அவரே சுமந்து காப்பார் என்று விசுவசிக்க வேண்டியவர்களாக உள்ளோம். அன்று லாசர் நோயுற்றிருந்த வேளை இயேசுவை அவருடைய சகோதரிகள் இயேசுவை அழைத்து வரும்படி ஆளனுப்புகின்றார்கள். அவர்களும் அவரை அழைக்கின்றார்கள் ஆனால் இயேசுவோ உடனடியாகச் செல்லவில்லை மூன்று நாட்களின் பின் அவர் சென்ற போது “இயேசுவே நீர் இங்கிருந்திருந்தால் எனது சகோதரன் இறந்திருக்கமாட்டான் என்று அவன் சகோதரி கூறுகிறாள். எல்லாவற்றையும் அறிந்த இயேசு அவன் சாகவில்லை அவன் உறங்குகின்றான் என்று கூறி “லாசரே வெளியேவா” என்று அதிகாரத்தோ கூப்பிடுகின்றார். லாசர் கல்லறையை விட்டு வெளியே வந்தான். இவ்வாறாக நிகழ்ந்தது இறைவனின் மாட்சி வெளிப்பட வேண்டுமென்பதை இயேசு அங்கு சுட்டிக்காட்டுகின்றார். எவ்வாறாக இருந்தாலும் நெருங்கிய நண்பர்களாக அவரைப்பற்றி. அவராலே யாவும் முடியும் என்று தெரிந்திருந்தும் மார்த்தாவும். மரியாவும் இயேசு உடனடியாக வரவில்லை என்று சிறிது நேரம் நம்பிக்கையில் தடுமாறிவிடுகின்றார்கள். இன்று நாங்கள் கூட இறைவன்மேல் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று சொல்லிக் கொண்டு வாழ்கின்றோம். ஆனால் எமது வாழ்வில் ஏற்படும் யாவற்றையும் இறைவன் பார்த்துக்கொள்வார் என்பதை நினையாது நிலைகுலைந்து விடுகின்றோம். இன்றைய முதல் வாசகத்திலும் கூட ஆண்டவர் தன்னை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மத்தியில் செய்த செயல்கள் யாவற்றையும் வெளிப்படுத்தி இறுதிக்கால வேளைகளில் கல்லறைகள் யாவற்றையும் திறக்கப் போகின்றேன் அப்பொழுது நானே ஆண்டவர் என்று ஏற்றுக்கொள்வீர்கள் என்று கூறப்படுவதைப் பார்க்கின்றோம். எனவே நாங்கள் நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனனும் உறுதியுடனும் வாழ தூய ஆவியின் வரம் வேண்டுவோம். அப்பொழுது நாங்கள் ஊனியல் பிற்கேற்ப வாழாமல் கிறிஸ்து விற்கேற்ற வாழ்க்கை வாழ்ந்து அவரை அன்று உயிர்த்தெழச் செய்த ஆவியானவர் எங்கள் ஒவ்வொருவரையும் உயிர்ப்பின் மாட்சியில் இணைத்தருள்வார்.